# முன்னுரை

''திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம்
மருவுபல் கலையின் சோதி, வல்லமை யென்பவெல்லாம்
வருவது ஞானத்தாலே...''

எனப் பாடிய பாட்டுப்புலவன் பாரதியின் வாக்கின்படி, எதுவுமே அமையப் பெறாத எளியவனான என்னை, என் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்ட அன்பிற்குரிய மதிநிலையம் உரிமையாளர் திரு.மெய்யப்பன் அவர்கள், ஒருநாள் பரமஹம்ஸ பரத்வாஜ் ஸ்வாமிகளின் முன்னர் அழைத்துப்போய் நிறுத்தினார்.

''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஸ்வாமிகள்.

''பதிப்பகங்கள் சிலவற்றுக்கு புருப் திருத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அவ்வப்போது சில புத்தகங்களையும் எழுதிக் கொடுத்து வருகிறேன்'' என்றேன்.

சிறிது நேர மௌன இடைவெளியைக் கடந்த பின்னர் ஸ்வாமிகள் புன்முறுவல் தவழ, ''இங்கே ஆசிரமத்துக்கு வாருங்கள். இங்கே நடக்கும் பூஜைகளைப் பற்றியும், இங்கே வரும் அன்பர்களின் அனுபவங்களைப் பற்றியும் சில பத்திரிகைகளில் எழுதிக் கொடுங்கள். கவலைப்படாதீர்கள்,

குனிந்து வளையாமல் நிமிர்ந்து நில்லுங்கள். மற்றதையெல்லாம் அம்பாள் பார்த்துக் கொள்வாள்'' என்று கூறி நிறுத்தினார்.

அன்று தொடங்கி இன்றுவரை ஸ்வாமிகள் சொன்னதை, தொடர்ந்து செய்து வருகிறேன். இதன் தொடர்பாக அடிக்கடி பரத்வாஜ் ஆசிரமத்திற்குச் சென்று வரவும், ஸ்வாமிகளுடன் நெருங்கிப் பழகவும் கூடிய வாய்ப்புகள் பெருகின. ஆசிரமத் துக்குச் செல்லும்போதெல்லாம் அங்கே நடைபெறக் கூடிய அதியற்புதமான பூஜைகளைக் காணவும் அங்கு வருவோரிடம் அனுபவங்களைக் கேட்டுப் பெறவும் அதிக அளவிலான வாய்ப்புகள் ஏற்பட்டன.

ஆசிரமத்திற்கு வருகிறவர்கள் பலரும் ஸ்வாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ''எங்கள் குடும்பத்தின் குல தெய்வமே நீங்கள்தான். எங்களுக்கு மறுவாழ்வு தந்த உங்களை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம்'' என்று கதறியழுது கண்ணீர் மல்கக் கூறுவதையெல்லாம் பார்த்துப் பார்த்து நான் வியப்பேன்.

தட்ப வெப்ப நிலைகளால் வானிலையில் ஏற்படும் மாற்றங்களால் வான் மழை பொய்ப்பதுண்டு. மக்கள் வாழத் தவிக்க நேருவதுண்டு. ஆனால் எந்தக் காரணத்தாலும் எந்த நேரத்திலும் வற்றாத பொய்க்காத மழை ஒன்றுண்டு. அதுதான் கருணை மழை. பல்வேறு துன்பங்கள் என்னும் அனலில் சிக்கித் தவிப்போரை மீட்டு, இன்பப் புனலில் ஆழ்த்தி மகிழ்விக்கும் அருள் மழை. வற்றாத கருணையுடன் அருள் மழையைப் பொழிந்து வாழ்விப்பதில் தன்னிகரற்றவள் அன்னை புவனேஸ்வரி தேவி என்பதை என் வாழ்வில் சில சொந்த அனுபவங்கள் நிரூபித்து வருகின்றன.

மேலும், சில நிகழ்ச்சிகள் என் நெஞ்சத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

கிருஷ்ணகிரியில் பாலாஜி என்ற இளைஞருக்கு தாம் வசிக்கும் பாரதி நகர் பகுதியில் பிரத்யங்கிரா தேவியின் உருவச்



சிலை ஒன்றைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இரண்டரை ஆண்டுகளாக இருந்து வந்த போதும் அதை நிறைவேற்றும் வழி அவருக்குத் தெரியவில்லை. ஒருநாள் அந்த இளைஞரின் கனவில் அம்பாள் தோன்றி ''திருவல்லிக் கேணியில் உள்ள ஒரு ஸ்வாமிகளிடம் போய்க் கேள். இதைப் பற்றிய விவரம் அறிவாய்'' என்று சொன்னதன் பேரில், அவர் திருவல்லிக்கேணிக்கு வந்து முகவரியைத் தேடிப் பிடித்து, ஸ்வாமிகளைச் சந்தித்து விவரங்களைக் கூறி அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஏற்கெனவே, ஸ்வாமிகளின் கனவிலும் அம்பாள் தோன்றி, ''ஓர் இளைஞன் உன்னைத் தேடிவருவான். அவன் விருப்பத்தை நிறைவேற்று'' எனக் கட்டளையிட்டிருந்தாள்.

அதன்படி ஸ்வாமிகள் நேரிலேயே சென்று கிருஷ்ண கிரியில் பிரத்யங்கிரா தேவியைப் பிரதிஷ்டை செய்தார். உருவப் பிரதிஷ்டை செய்தார். உருவப் பிரதிஷ்டைக்கு முன்னர் சிறப்பான சண்டிஹோமம் ஒன்றை நடத்தி, தர்ப்பையால் ஒவ்வோர் அங்கமாகத் தொட்டு பிராணபிரதிஷ்டை செய்யும் போது, ஓர் அற்புத நிகழ்வாக பிரத்யங்கிரா தேவியின் முன்னால் யாக குண்டத்திலிருந்து ஓர் அக்கினிப் பிழம்பு தோன்றியதைக் கண்டு கூடியிருந்தோர் அனைவரும் வியந்து பார்த்தார்கள். பக்திப் பரவசத்தில் மூழ்கினார்கள்.

லீலா பத்மநாபன் என்ற பெண்ணின் கனவில் அனுமன் ஒரு நாள் தோன்றி, ''எனக்கொரு சிலையை நீ நிறுவ வேண்டும். திருவல்லிக்கேணியில் ஒரு ஸ்வாமிகள் இருக்கிறார். அவரிடம் சொன்னால் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்'' என்று தெரிவித்ததன் பேரில், அந்த அம்மையார் ஸ்வாமிகளிடம் வந்து தெரிவித்தார். ஸ்வாமிகள் மாமல்லபுரத்துக்குச் சென்று சிற்பிகளிடம் சொல்லி ஆஞ்சநேயர் சிலையைச் செய்ய ஏற்பாடு செய்து, வேலை முடிந்தவுடன் அதை எடுத்து வந்து தேனாம்பேட்டையிலுள்ள கிருஷ்ணசாமி தேவஸ்தானத்துக்குச்

சொந்தமான இடத்தில் அற்புதமான தோற்றத்துடன் கூடிய அந்தச் சிலையை ஜலவாசத்தில் வைத்திருக்கிறார்கள். ஆஞ்சநேயர் கோயிலுக்கான பூமி பூஜைகளையும் ஸ்வாமிகளே நடத்தி வைத்தார்கள். அந்தக் கோயில் கட்டுமான வேலைகள் முடிவடைந்து விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

ஒன்பது வயது வரை நாக்குகூட சரியாகப் புரளாமல், பேச்சும் சரியாக வராமல் சிறுவர்களுடன் சிறுவனாய் விளையாடிக் கொண்டிருந்த இராமகிருஷ்ணன் என்ற பெயருடன் இருந்து வந்த நிலை மாறி இன்று பரமஹம்ஸ பரத்வாஜ ஸ்வாமிகள் என்ற பெயருடன் நாடு போற்றும் நல்லருள் நாயகராக - நாற்பது அருமையான நூல்களின் படைப்பாளராக, மாதத்தில் பத்து கும்பாபிஷேகம் என்ற அளவில் ஊர் ஊராகப் போய் கோயில் கும்பாபிஷேகங்களை நடத்தி வைக்கும் மகானாக - தம்மை நாடிவரும் பக்தர்களின் துயர்களைப் போக்கப் பல்வேறு பரிகார பூஜைகள், ஹோமங்கள் போன்றவற்றை நடத்தி அவர்களுக்கு நிவர்த்தி ஏற்படச் செய்யும் அருளாளராக தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல் கடல் கடந்த பல நாடுகளிலும் தமக்குப் பக்தர்களைப் பெற்று விளங்க முடிகிறது என்றால், அது அம்பாளின் பூரணமான அருள் என்பதைத் தவிர வேறில்லை.

23.2.2002 அன்று -

நியூஸிலாந்தின் தலைநகர் வெலிங்டன் அருகில் ஒரு கார் விபத்து. ஈரோட்டிலிருந்து சென்றிருந்த மில் ஜவுளி ஆலை அதிபர் சுப்பிரமணியனின் மனைவி மீனாட்சி காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது நடைபெற்ற விபத்தில் அவருடன் காரில் பயணம் சென்ற நால்வரில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். மற்ற மூவரில் ஒருவரான மீனாட்சி, கடுமையான அடிகள், காயங்கள், உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றால் ஒன்றன் பின்



ஒன்றாக தலையில், பிடரியில், நெற்றியில் என பத்து இடங்களில் ஆபரேஷன் செய்யப்பட்டு தையல் போடப் பட்டு, சில நாள் கழித்து டாக்டர் ஜான் கீட்டிங் தலைமையிலான உலக தரம் வாய்ந்த நிபுணர்களின் சிகிச்சையால் அந்தப் பெண் வீட்டுக்குத் திரும்பினார். திரும்பியவர், ''நீங்கள் அம்பாளுக்குப் பூஜை செய்து கொடுத்த அம்பாளின் குங்குமப் பிரசாதத்தை எப்போதும் என் பையில்தான் வைத்திருப்பேன். நீங்கள் எழுதிக் கொடுத்த ஸ்லோகத்தை தினமும் தவறாமல் படித்து வருகிறேன். அதுதான் என் உயிரைக் காப்பாற்றியதாக உறுதியாக நம்பு கிறேன்'' என்று கடிதம் எழுதியிருந்தார். இந்நிகழ்ச்சி பத்திரிகைச் செய்தியாக எல்லா இதழ்களிலும் வெளிவந்திருந்தது.

இத்துணை அருளாற்றல் பெற்ற மகானுடன் பழகும் பெரும் பாக்கியமும், மூச்செல்லாம் 'முருகா' என வாழும் முருகபக்தனாகிய எனக்கு, அகிலாண்ட கோடி அன்னையாகிய அருள் வடிவான புவனேஸ்வரி தேவியின் திருவடி தரிசனத்தை அடிக்கடி பெற்று மகிழும் பாக்கியமும் கிடைக்கப் பெற்று, பல ஆன்மிக மாத இதழ்களில் மாதந்தோறும், நான் எழுதி வரும் கட்டுரைகளின் முதல் தொகுதியை கங்கை புத்தக நிலையத்தார் வெளியிட்டார்கள். அடுத்த தொகுதியாக 'கோபுர தரிசனம்' என்ற மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளைக் கொண்ட இந்நூலை நானே சொந்தமாக வெளியிட்டுக் கொள்ள அனுமதிக்குமாறு ஸ்வாமிகளை வேண்டினேன். மறுபேச்சின்றி மனமுவந்து அனுமதி அளித்தார்கள். அதன் விளைவே உங்கள் கரங்களில் தவழும் இந்நூல். இன்னும் இரு தொகுதிகள் அடுத்து வெளிவர உள்ளன. ஆன்மிக உள்ளங்கள் தங்கள் ஆதரவை நல்குவார்கள் என நம்புகிறேன்.

இறைபணியில் என்றும்,

**ரவிதாசன்**

❑ • ❑